## தேர்தல் நிதியாக்கத்தினை சாதகமான முறையில் பயன்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் பழக்கப்படுதல் வேண்டும்

இன்று நாம் கலந்துரையாடலுக்கு உட்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான தேவையாக கருதப்படுகின்ற ஒரு தலைப்பாகும். ஜனநாயக சமூகத்தில் விசேடமாக தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவது மிக முக்கியமான தேவையாக காணப்படுகின்றது. முழு உலகும் வாணிபமயப்பட்டுள்ள நிலைமையில் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவது என்பது முன்னணியான ஒரு கலந்துரையாடலாக மாறியுள்ளது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் மற்றும் பவ்ரல் அமைப்பு ஆகியன இது தொடர்பில் விரிவான கலந்துரையாடலை சமூகத்தில் ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியானதொரு விடயமே. இந்நாட்டின் தேர்தல் செயன்முறையினை வலுப்படுத்துவது தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள பணிகளை குறைத்து மதிப்பிட முடியாது. மேற்படி இரண்டு அமைப்புக்களினதும் மத்தியஸ்தத்துடன் ஏற்பாடு செய்த இவ்வாறானதொரு செயலமர்வு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமைத்துவத்தில் அண்மையில் நடைபெற்றதனை பெருமையுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதன்போது தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமொன்று நாட்டில் நிறைவேற்றி இல்லாதபோதும், அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஏகமனதாக யோசனையோன்றினை நிறைவேற்றி அண்மையில் வரவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அந்தந்த அபேட்சகர்களது செலவுகளை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும் என அறிவித்தல் வழங்கினார்கள். சட்டமொன்று இல்லாத போதும் இப்போதைக்கு நாம் அதற்கான வேலைத்திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளோம்.

நான் நினைக்கின்றேன் இதுவொரு சிறப்பான முன்னேற்றம். செலவு என்பது எல்லையில்லாதது. அதாவது இலங்கையில் 1977இல் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களுடனான சமூக சூழலில் இந்நாட்டின் தேர்தல் பிரசாரமானது எல்லையில்லா ஊழல் நிறைந்த துறையாக மாற்றமடைந்துள்ளது. ஆயினும் இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயகத்தைப் பற்றி பேசுகின்றன. அனைத்து அரசியல் கட்சிகளும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலைப் பற்றி பேசுகின்றன. இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கு சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலொன்றினை உறுதிப்படுத்த வேண்டுமெனில் மற்றும் அதேபோல் இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கு ஜனநாயகத்தினை உறுதிப்படுத்த வேண்டுமெனில், அதற்காக அரசியல் கட்சிகள் செலவுகளை வரையறை செய்வதற்கான கட்டுப்பாடுகளுக்கு இணக்கப்பாட்டினை தெரிவித்தல் வேண்டும்.

தேர்தல் திணைக்களம் இருந்த காலத்தில் இடம்பெற்றதைப் போன்றே தேர்தல் ஆணைக்குழுவால் உரிய தேர்தல் செலவுகளை வருடத்திற்கொரு தடவை வரவழைத்துக் கொள்ளும் செயற்பாடு மட்டுமே தற்போதைக்கு இடம்பெறுகின்றது. அவ்வாறு கிடைக்கின்ற நிதி அறிக்கைகள் கூட விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை. எனவே நான் தலைவரிடம் வேண்டிக்கொள்வது யாதெனில் குறிப்பிட்ட அறிக்கைகளை விசாரணை செய்வதற்கு பிரிதான அலகொன்றினை தேர்தல் ஆணைக்குழுவில் உருவாக்க வேண்டும் என்பதேயாகும். அவ்வாறானதொரு முயற்சியின் மூலமாக மட்டுமே நாட்டில் வெளிப்படைத்தன்மையினை உருவாக்க முடியும்.

அடுத்த விடயம் யாதெனில், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக வேறு நாடுகள் பின்பற்றுகின்ற வழிமுறைகளை எந்தளவு தூரத்திற்கு எமது நாட்டுக்குரியதாக்கிக் கொள்ள முடியும் என்ற விடயமாகும். இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் குறிப்பிட்டளவிற்கு இதில் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. நான் நீண்ட காலமாக அரசியல் கட்சியொன்றின் உறுப்பினராக செயற்பட்டு வருகின்ற காரணத்தால் கட்சியொன்றில் காணப்பட வேண்டிய வெளிப்படைத்தன்மை எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற தெளிவு காணப்படுகின்றது. எனவே நாம் இங்கு இரண்டு கட்சிகளையும் வெல்லக் கூடிய சூழ்நிலையினையே உருவாக்க வேண்டியுள்ளது.

நிதி இன்றி தேர்தலில் ஈடுபட முடியாது. ஆயினும் அந்த நிதி எங்கிருந்து கிடைத்தது என வாக்காளர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அது தொடர்பில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. முன்னைய காலத்தில் காணப்பட்டதைப் போன்று செலவுகளை அறிக்கையிடுதல் போன்ற முறைமையையேனும் கையாளுதல் ஆரம்பப் படிமுறையாக மிக முக்கயமானதாக அமையும். எமக்கு நினைவிருக்கின்றது, அன்று வெற்றி பெற்ற கட்சியின் செயலாளர் தேர்தல் அதிகாரிக்கு செலவு ஆவணத்தினை அனுப்பி வைப்பார். அவர்கள் அதனை அவ்வாறு செய்தது அவசியப்பாட்டுடனும் சட்டத்தின் முன் ஒழுக்கத்தினைக் கடைப்பிடிக்கும் வகையிலேயே. இது முன்னைய காலத்தில் காணப்பட்டதொரு சம்பிரதாயம் மற்றும் பெறுமதியான சட்டமென்ற காரணத்தினால் அதனை அனுசரித்து செல்வது இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கு அத்துனை கடினமான விடயமாகாது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் 2016ஆம் டிசம்பர் 31ஆம் திகதி கொழும்பில் நடாத்திய தேர்தல் பிரசார நிதியாக்கம் தொடர்பான நிகழ்ச்சியின் போது இலங்கை சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் தேர்தல் ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் நிலையான குழுவின் சிரேஷ்ட உறுப்பினருமாகிய சட்டத்தரணி திரு. சம்பாணி பத்மசேகர அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பாகும்.